**கலென்பிந்துனுவெவ பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சலினையும் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 200,332 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் 02 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 691,598 இற்கு பதிலாக ரூபா 783,458 கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்தமை காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 91,860 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் அனுமதிப்பத்திரக்கட்டண வருமானம் ரூபா 813,755 ஆக இருந்த போதிலும் அது வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 579,255 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் வருமானம் ரூபா 234,500 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிகக்கப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த 02 செயற்திட்டங்களின் பெறுமதி மூலதனமாக்கும் போது நிலையான சொத்துக்காக ரூபா 1,954,129 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய நீர்க்கட்டண வருமானம் ரூபா 403,772 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்தமையால் ஆண்டின் வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2017 ஆம் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 நிகழக்கத்த பொறுப்புக்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் தடாக செயற்திட்டத்திற்குரிய செலுத்த வேண்டிய தொகை ரூபா 2,792,119 என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சட்டக் கட்டணங்களுடன் கொடுப்பனவு செய்வதற்குள்ள பொறுப்புக்கள் ரூபா 4,245,707 என

சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் கண்டறியப்பட்டது. அதன் பிரகாரம் மேலும் கொடுப்பனவு செய்வதற்கு உள்ள ரூபா 1,453,588 தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,229,846 என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது கணக்கு குறிப்பின் பிரகாரம் ரூபா 730,746 எனவும் பி.ச 07 அறிக்கையின் பிரகாரம் ரூபா 698,346 தொகை என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) வீதவரி பதிவேடு மற்றும் உரிய கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிகளுக்கு இடையே ரூபா 1,888,252 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்காக அசைவற்ற சொத்துக்களை வாடகை வழங்கியதன் மூலம் உழைக்கப்பட்டிருந்த வருமானம், கணக்கின் பிரகாரம் ரூபா 4,266,217 ஆக இருந்த போதிலும் கணக்கு குறிப்பின் பிரகாரம் அது ரூபா 4,310,217 ஆக இருந்தமையால் ரூபா 44,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் கனரக வாகன இயந்திரங்களின் வருமானம் தொடர்பான கணக்கு குறிப்புக்கள் மற்றும் அதற்குரிய பேணப்பட வேண்டிய பதிவேடுகளுக்கு இடையே ரூபா 712,600 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

ரூபா 106,460 கூட்டுத்தொகையான 03 பெறவேண்டிய கணக்கு மீதிகள் வருடக் கணக்காக இருந்து வருவதுடன் அம்மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

ரூபா 2,444,658 கூட்டுத்தொகையான 04 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் வருடக் கணக்காக இருந்து வருவதுடன் அம்மீதிகளை இனங்கண்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 88,010,893 ஆகவும் இறுதி மீதி ரூபா 185,068,164 ஆன 09 பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 27 நாட்குறிப்புகளுக்குரிய ரூபா 146,586,169 தொகை பேரேட்டுக் கணக்குகளுக்கு பிரதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வாடகை வருமானமாக பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 96,000 தொடர்பாக எவ்வித பதிவேடொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.6 போதியளவு அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) பல வருடக் கணக்காக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் 03 கணக்கு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்படாமல் அம் மீதிகளுக்குரிய மீளாய்வாண்டில் திரட்டு நிதியத்திற்கு ரூபா 894,478 மற்றும் ரூபா 2,803,643 செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நீதிமன்றக் கட்டளையொன்றின் பேரில் 2011 ஆம் ஆண்டு முதல் இடை நிறுத்தப்பட்டிருந்த வங்கிக் கணக்கின் மீதி சீர்செய்வதற்காக ரூபா 311,769 திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு இலங்கை வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானம் ரூபா 10,138,909 ஆக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விட கூடிய வருமானம் ரூபா 3,998,823 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

02 வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 7 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை வருடம் பூராகவும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் அப்பணத்தை ஆக்கபூர்வமான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலிடப்பட்ட வருமானம். சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 சனவரி 01 இல் ஆரம்ப மீதி | 2017 இல் பட்டியலிடப்பட்ட வருமானம் | 2017 இல் சேகரிக்கப்பட்ட வருமானம் | | 2017 திசெம்பர் 31 இல் நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி | பெறுமதி | 2017.01.01 மீதியில் பெறுகை பெறுமதி | 2017 பட்டியலிடப்பட்டது காசாக பெறுமதி | பெறுமதி |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அனுமதிப் பத்திரங்கள் | | 805,000 | | 812,405 | - |
| கடை வாடகை | 580,200 | 544,200 | 202,710 | 562,200 | 115,250 |
| வாரச் சந்தை | 2,426,000 | 2,427,570 | 62,275 | 3,821,472 | |
| இறைச்சிக் கடை | 455,665 | 473,600 | - | 475,620 | 59,270 |
| அசையாத சொத்து வாடகைக்கு வழங்கல் | - | 900,000 | - | 4,266,218 | 75,600 |
| வீதி கோடு | - | 200,000 | - | 189,800 | - |
| மணல் போக்குவரத்து | - | - | - | 20,500 | - |
| அறிவித்தல் பலகை | - | 14,000 | - | 7,100 | - |
| நீர் இணைப்பு வழங்கல் - | - | 3,500,000 | - | 2,036,805 | - |
| நீர் விண்ணப்ப படிவம் விற்பனை | - | 40,000 | - | 21,100 | - |
| நீர் | - | 75,000 | - | 70,887 | - |
| நூலகம் | - | 17,000 | - | 26,135 | - |
| வீதவரி | 1,846,824 | 1,717,920 | 4,791,516 | 1,820,537 | 4,847,111 |
| மொத்தம் | 5,308,689 | 10,714,290 | 5,056,501 | 14,130,779 | 5,097,231 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை செயலாளரினால் வழங்கிய வருமான சேகரிப்பு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 10,714,290 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 18,510,274 எனக் குறிப்பிடப்பட்டமையால் ரூபா 7,795,985 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை செயலாளரினால் வழங்கிய வருமான சேகரிப்பு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 1,847,824 இல் ரூபா 4,791,516 தொகையும் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி ரூபா 1,717,920 இல் ரூபா 1,820,537 தொகையும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி பெறுமதி ரூபா 4,847,111 எனக் குறிப்பிடப்பட்டமையால் செயலாளரினால் வழங்கப்பட்ட வருமான சேகரிப்பு செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி போலியானது என அவதானிக்கப்பட்டது.

### 2.3.3 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் கட்டணங்கள் தொடர்பாக அறிவித்தலின் பிரகாரம் வீதவரி வருமானமாக வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியில் 10 சதவீதம் கணக்கிடப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் வீத வரி வருமானம் ரூபா 83,425 ஆல் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 4,847,110 ஆக இருந்ததுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 கடை வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 115,250 ஆக இருந்ததுடன், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவை பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------

சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

-------------------------------------------------------------

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

--------------------------------------------------------------

(அ) காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் 17 சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 09 சொத்துக்களுக்குரிய கிரயம் ரூபா 79,828,802 தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. ஏனைய சொத்துக்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணியின் அளவு பெறுமானம் இனங்காணப்படாத 05 காணிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

----------------------------------------------------------

சபையில் சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 26,217 ஆன ஊழியர் கடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

--------------------------------------------------------------

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) வருமானம் சேகரிக்ககூடிய 35 கடைகள் கலென்பிந்துனுவெவ பிரதேச சபைக்குச் சொந்தமாக இருந்ததுடன் அதில் 04 கடைகள் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு தவறியமையால் ரூபா 72,000 வருமாம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) இறைச்சிக்கடை 02 மாதங்கள் தவணை கொடுப்பனவு செய்யப்படாமையால் மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் நிலுவை வாடகை ரூபா 59,270 தொகையை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பணமாக கிடைத்திருந்த கனரக வாகனங்கள் மற்றும் இயந்திர வருமானம் மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஏனைய கடன்கொடுத்தோருக்கு ஈடுசெய்யப்பட்டிருந்த ரூபா 283,100 தொகை மற்றும் உள்ளூராட்சி மன்ற வீதிகளை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக கனரக வாகனங்கள் மற்றும் இயந்திரத்தை ஈடுபடுத்தியமைக்காக ரூபா 588,000 வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3.5 வருடாந்த பெறுகைத் திட்டம்**

----------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நள்ளாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

2015 மார்ச் 18 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

நிதி அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய GMA/2009/01 ஆம் இலக்க மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | இனங்காணப்பட்ட குறைபாடுகள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பிடப்பட்ட வருமானத்தை அறவிடாமை |
| | (ii) மதிப்பீடுகளுக்கு உரிய செலவினங்களை கட்டுப்படுத்தலும் இடம்பெறாமை. |
| (ஆ) கணக்கீடு | (i) கணக்கு பதிவேடுகள் நாளதுவரை யாக்கப்பட்டு பேணப்படாமை |
| | (ii) பொது பேரேடு சமப்படுத்தாமை |
| (இ) சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாமை |
| | (ii) பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை. |